**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.15**

**தேதி: 14.08.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **சாந்தி பாலாஜி** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் ஊமச்சிகுளம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 06.01.2015ம் தேதி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில ஆய்வாளராக பணிபுரிந்த போது சிப்காட் காவல் நிலையக் குற்ற எண்.3/2015 வழக்கு சம்பந்தமாக மானாமதுரை உட்கோட்ட காவல்துணை கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் மேற்படி வழக்கில் இறந்து போன அழகு மனைவி ஆறுமுகம் என்பவரது இறப்பு குறித்து 07.01.2015 ம் தேதி காலை 07.00 மணிக்கு மானாமதுரை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முத்துராஜா, ராமு, சின்னக்கண்ணு, மலைச்சாமி, சேகர் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணையை ஆரம்பித்து அன்று காலை 09.00 மணிக்கு முடித்தேன். அது சம்பந்தமாக நான் அளித்துள்ள பிரேத விசாரணை அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்று காலை 09.15 மணிக்கு பெண் காவலர் 966 ராதா என்பவர் மூலம் இறந்த போன அழகு மனைவி ஆறுமுகத்தின் உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்த பின்னர் அவரது உடலை நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் அந்த சமயத்தில் சிப்காட் காவல் நிலையத்தின் பொறுப்பில் இல்லை. என்னை பிரேத விசாரணை செய்ய சொல்லி மானாமதுரை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் என்னை நியமித்ததாக நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்று சொன்னால் என்னிடம் தற்போது இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்திலிருந்து 11 மணி நேரம் கழித்து பிரேத விசாரணை நடைபெற்றுள்ளது என்று சொன்னால் அது சரிதான். 11 மணி நேரம் கழித்து நான் குறித்துள்ள காயங்கள் சரியானதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. அ.சா.ஆ.11 காவல் நிலையத்தில் வைத்து பின்னீட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் அ.சா.ஆ.11 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.78/2015**

**வழக்கு சாட்சி: PW.16**

**தேதி: 14.08.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **கண்ணதாசன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **குருசாமி** | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சாக்கோட்டை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக 07.01.2015ம் தேதி மானாமதுரை குற்றப் பிரிவு காவல் ஆய்வாளராக பணியிலிருந்தேன். அன்று மானாமதுரை உட்கோட்ட காவல் துறை துணை கண்காணிப்பளரது உத்தரவுப்படி சிப்காட் காவல் நிலையக் குற்ற எண்.3/2015 பிரிவு 294(பி), 302, 506(2) இதச வழக்கில் புலன் விசாரணை அதிகாரிக்கு உதவியாக அந்த வழக்கின் இறந்து போன நபர் தனபாக்கியம் என்பவரது இறப்பிற்கான காரணம் குறித்து 07.01.2015ம் தேதி காலை 07.00 மணிக்கு மானாமதுரை அரசு மருத்துவமனையில் பஞ்சாயத்தார்கள் முனிரத்தினம், சிவா, துரைப்பாண்டி, முனியாண்டி, செல்லமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணையை தொடங்கி அன்று காலை 09.00 மணிக்கு பிரேத விசாரணையை முடித்தேன். இது சம்பந்தமாக நான் வழங்கிய பிரேத விசாரணை அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் காலை 09.15 மணிக்கு மேற்படி தனபாக்கியத்தின் உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி பெண் காவலர் 1799 சத்யா என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனைக்கு பின் இறந்த நபரது உடலை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்துவிட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் சிப்காட் காவல் நிலையத்தில் அந்த சமயத்தில் பொறுப்பில் இல்லை. காவல் துறை துணை கண்காணிப்பாளர் இந்த வழக்கு சம்பந்தமாக பிரேத விசாரணை செய்ய பணித்த உத்தரவு நகலை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான்

கொண்டு வந்துள்ளேன். (சாட்சி கைவசம் உள்ள கோப்பிலிருந்து திருமதி.சாந்தி மற்றும் தன்னை மானாமதுரை உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் இந்த வழக்கு சம்பந்தமாக பிரேத விசாரணை செய்ய பணித்ததற்கான நமூனாவை தாக்கல் செய்கிறார். அதன் நகல்களை எதிரிக்கு வழங்க உத்தரவிடப்படுகிறது. அந்த நகல்கள் அரசு தரப்பில் குறியீடு செய்ய அனுமதியளிக்கப்படுகிறது.) அவை **அ.சா.ஆ.13, 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களை புலனாய்வு அதிகாரி குற்ற இறுதியறிக்கையுடன் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 11 மணி நேரம் கழித்து பிரேத விசாரணை நடத்தியுள்ளதால் காயங்களை என்னால் சரிவர குறிப்பிட இயலாது என்று சொன்னால் அது சரியல்ல. நான் செய்த பிரேத விசாரணை சம்பந்தமான பஞ்சாயத்தார்கள் வேலூர் கிராமத்தைச் சாராதவர்கள் என்று சொன்னால் அது சரிதான். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் நான் சொன்ன பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் நான் பிரேத விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. மேலதிகாரிகளின் வேண்டுகோளிற்கிணங்க காவல் நிலையத்தில் வைத்து அ.சா.ஆ.12 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல.